101

Reg. No. M. 1534.

R. C. Training
School Magazine,
Trichinopoly.

7-OCT 1931

திருச்சினுப்பள்ளி
திருக்குடும்பப் பாடசாலையில் மலரும்

போதனு விஷயப் பூங்கொத்து

மாதமோருமுறை மலரும்: வருஷ சந்தா ரூபாய் 1.

கோத்து 22	செப்டெம்பர் 1931	மலர் 3

பத்திராதிபர் குறிப்புகள்

JC
ஈ211, N11PP.
N31·22·3
182285

...லெண்டு தேசத்திலுள்ள சகல பிள்ளைக
...ஷ சக்திக்கு இசைந்தவாறு உயர்தரப்
...ல்வ விருத்திக்கு அடிப்படையாயிருக்க
...த்த யோசனைகள் அநேகம் நடந்துவரு

கின்றன. இதினிமித்தம்தான் பிள்ளைகள் பள்ளிக்கூடத்தைவிடக்கூடிய வயதை உயர்த்த வேணுமென்னும் மசோதா கொண்டு வரப்பட்டது. ஆனால் தேசத்திலுள்ள சகல பிள்ளைகளும் உயர்தரப் படிப்புப் படிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யுமுன் வயதை உயர்த்துவது உசிதமல்லவென்று மேற்சொன்ன மசோதாவை நிறுத்திவைத்திருக்கிறது. அநேகமாய் கத்தோலிக்குப் பிள்ளைகள் வாசிக்கக்கூடிய பாடசாலை வசதிகள் பொதுநிதியிலிருந்து செய்யப்பட்டபின்தான் இதைப்பற்றித் திரும்பவும் பேசுவார்கள்போலும். நமது தேசத்தில் ஆரம்பப்படிப்பு பரவச் செய்ய சர்க்கார் முயற்சியெடுப்பதாகச் சொல்லிக்கொள்ளுகிறார்கள். ஆனால் படிக்கக்கூடிய பிள்ளைகள் எல்லோரும் படிப்பதற்கு அவசியமான சௌகரியங்கள் என்ன செய்துவருகிறார்கள்? இதற்காக முன்வந்து உழைப்பவர்களுக்கு உற்சாகமாவது ஊட்டுகிறார்களா?—இனிமேல் உபாத்திமைத்தொழில் பயிலவருபவர்களுக்கு உபகாரச் சம்பளத்தைக் குறைக்கப்போவதாகவும் அல்லது அறவே நிறுத்திவிடப்போவதாகவும் வதந்தி.—பாடசாலைக் கட்டிடங்கள் தட்டுமுட்டு சாமான்களுக்கு சர்க்கார் உதவியை எதிர்பார்க்க முடியாதென்று பாடசாலைகளை நடத்துபவர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

* * *   * * *   * * *

இவ்வாண்டில், மிக்கேல் பாரடே (Michael Faraday) என்ற கீர்த்திவாய்ந்த பௌதீக சாஸ்திரியாரைப்பற்றி உலகத்தில் பற்பலவிடங்களிலும் பிரஸ்தாபங்கள் நடைபெறுவதாகும். இப்பெரியார் இற்றைக்கு நூறு ஆண்டுகட்குமுன்னர், அதாவது 1831-ம் ஆண்டில், காந்த சக்திக்கும் மின்சாரசக்திக்குமுள்ள பரஸ்பர சம்பந்தத்தையும் அதன் உபயோகங்களையும் கண்டுபிடித்தார். அதன் பயனாகவே உலகத்திய தற்கால நாகரீக வாழ்க்கையின் முன்னேற்றம் கணிக்கப்படுகிறது. மின்சாரத்தின் உதவியால் இயங்கும் இயந்திரசாலைகள், வெளிச்ச சாதனங்கள், தந்தி, டெலிபோன் முதலிய பற்பல சௌகரியங்கள் உடனே நின்றுவிடுவதாக வைத்துக்கொண்டு, அதனால் விளையக்கூடிய விபரீதங்களை ஓரளவு ஓர்ந்தால், பாரடே பிரானின் பெருமையும், அவர் கண்டுபிடித்துள்ள காந்தமின்சார இயக்கத்தின் நன்மையும் தெற்றெனப் புலப்படும்.

* * *   * * *   * * *

எனவே, அதன் ஞாபகார்த்தமாக, அதன் நூறுவது ஆண்டின் நிறைவிழாக் கொண்டாட்டத்திற்காக லண்டன்மாநகரத்தில்

182235

ஆல்பர்ட் ஹால் என்ற மாளிகையில் பற்பல நாடுகளிலிருந்து வந்து கூடும், பௌதீக, ரஸாயன, சிற்ப சாஸ்திரிகளின் மாப்பெருங் கூட்டம் ஒன்று இம்மாதம் நடைபெறவிருக்கின்றது. அவ்வமயம், மின்சாரக் கண்காக்ஷியொன்றும் ஏற்பாடாயிருக்கின்றது.

*** *** ***

இந்த நிபுணருடைய ஜீவிய சரித்திரம் மிக விசித்திரமானது. அதைப்பற்றி அடுத்த மாதச் சஞ்சிகையில் எழுதுவோம்.

*** *** ***

தோட்டத்தில் பயிர்கள் வளருவதுபோல் பள்ளிக்கூடத்தில் பிள்ளைகளை வளரவிடவேண்டுமென்பது தற்காலத்தில் மாத்திரமல்ல எக்காலத்திலும், அறிவும் திறமையும் பொருந்திய ஆசிரியர்களின் துணிபு. ஆனால் பிள்ளைகளின் சுபாவநாட்டங்களுக்கு ஒரு தடையும் போடாமல், அவர்கள் மனம்போன போக்கெல்லாம் போகவிடுவதே படிப்பிப்பவர்களின் வேலை என்னும் கொள்கை அறிவிலிகளும் சோம்பேறிகளுமான சில உபாத்திமாரே ஏற்றுக்கொள்ளத்தக்கது. இப்பேர்ப்பட்ட கொள்கை சென்ற நூற்றாண்டில் அஞ்ஞானிகளான சில போலிப்போதகர்களின் ஆதரவில், ஐரோப்பாக் கண்டத்திலும் அமெரிக்காக் கண்டத்திலும் பரவிச் சிற்சில இடங்களில் பெருந்தின்மை விளைவித்து வந்திருக்கிறது. இந்தப் போதனையின்படி பிள்ளைகளின் சுபாவம் சுயேச்சையாய் வளர்ந்தால் நன்மையே பயக்கும்; அதை ஒழுங்கு படுத்துவது என்பதெல்லாம் அதை நிர்ப்பந்தப்படுத்துவதேயாம். பலவந்தமில்லாமல் பிள்ளை போகும் போக்கைக் கவனித்து, அதற்கு ஒரு விக்கினமும் வராமல் கவனிப்பதே உபாத்தியாயரின் கடமை. அப்படியானால் தோட்டக்காரன் தோட்டத்தில் செய்யவேண்டிய வேலையென்ன? செடி சாய்ந்து வளர்ந்தால் அதை நிமிர்த்தக்கூடாது; அது சாய்வதற்குத் தடையாயிருப்பதை எடுத்தெறியவேண்டும். அது வளரும்போது பக்கத்திலிருக்கும் வேறொரு செடியின்மேல் சாடினாலும் அப்படியே விட்டுவிட வேண்டியதுதான். இம்மாதிரியே பள்ளிக்கூடத்து உபாத்தியாயர் பிள்ளைகளின் மனம் எப்படிக் கோணிப்போனாலும் அவர்களின் குணம் புறத்தியாருக்கு எவ்வளவு கஷ்டத்தைக் கொடுத்தாலும் அந்தந்தப் பிள்ளையின் சுபாவத்துக்கு ஒரு பலவந்தமும் பண்ணாமல் பிள்ளைக்குத் தன்னடக்கம் என்பதையும் கற்பியாமல், தன்னை ஆண்டு நடத்துவதென்றால் தன்னிஷ்டப்படி திரிவதே என்று சும்மா விட்டுவிடவேண்டும். பிள்ளைகளின் குற்

182285

றங்களைக் கண்டிக்கக்கூடாது; அவைகளுக்காக அவர்களைத் தண்டிக்கக்கூடாது. புத்தி போதகங்களைவிட சுபாவ நாட்டமே சன்மார்க்கத்துக்கு உத்தம வழி.

இப்படிப் போதிப்பவர்களுக்கு சன்மார்க்கமென்ருல் இன்னதென்று தெரியுமா, மாணிட சுபாவத்தின் தன்மையைப்பற்றிய ஆராய்ச்சியுண்டா, என்று ஐயுறவேண்டியிருக்கிறது. எப்படியும் இவர்களுடைய சாதனையினிமித்தமே அநேகமாய் இப்போது அமெரிக்காவில் துர்க்குண துர்ச்செய்கைகள் பெருகி வருகிறதென சமீபத்தில் நடந்த கலாசாலை அதிகாரிகளின் கூட்டம் ஒன்றில் பேர்போன சாஸ்திரியாரொருவர் துணிந்து கூறியிருக்கிருர். இந்தச் சாஸ்திரியார் கொலம்பியா சர்வ கலாசாலையில் போதனுசிரியரும் கல்வி பயிற்றுவதைப்பற்றி அரிய கிரந்தங்களை எழுதியவருமாகிய வில்லியம் பக்ளி (W. C. Bagley) என்பவர். அவர் சொல்லியதாவது:—

"கல்வித்துறையில் இத்தகைய கட்டுக்கடங்காச் சுயேச்சைக் கொள்கையைப் பரவ விடுவதால், ஜனஸமூக வாழ்வின் தீய நெறிகள் திருந்தி, புனிதமாவதற்கு மாருக, அஃது சீரழிந்து கேவல நிலையையடையக் காரணமாகின்றது. கூறவேண்டின், நம்மிடை தற்போது தாண்டவமாடிவரும் குற்றம், கொலை முதலிய மகா பாதகங்களின் பெருக்கமும், துர்நடத்தையையொட்டிய பிரஷ்ட வழக்குகளின் கணக்கும், அரசாங்கத் துறையில் நிகழும் யோக்கியதையற்ற அதிக்கிரமங்களும், ஏனை சமூக, அரசாங்கக் கேவலங்களும் அக்கொள்கையின் அறிகுறிகளாம் என்பதை நாம் நன்கு உணர்ந்துகொள்ளவேண்டும்."

"அன்றியும், மெய்யாகவே, சில பாடசாலைகளில் ஆசிரியரின்பால் செலுத்தவேண்டிய மரியாதை, கீழ்ப்படிதல் முதலிய நல்ல மாணுக்கனுக்குரிய இலக்ஷணங்கள் தோன்றவேண்டியதற்கு மாருக, அவமதிப்பு, கீழ்ப்படியாமை, உதாசீனம் முதலிய ஒழுங்கீனங்கள், முற்கூறிய சுயேச்சைக் கொள்கைப்படி, தாராளமாய் நடைபெற வேண்டியவையாகின்றன; ஏனெனில், பிள்ளைகளையடக்கியாளுதல் அக்கொள்கைக்கு விரோதமாம். எனவே, நிலைமை சீர்திருத்தமாவதற்குள் அது சீர்கேடடையக்கூடுமென்று ஐயுற அநேக அறிகுறிகள் காணப்படுகின்றன."

இப்பிரஸ்தாபப் பிரசினையை யொட்டில், சில கல்வியறிவாளர்களது அபிப்பிராயங்கள் நமது கவனத்திற்குரியவையாகும்:—

"தற்காலம் மாணுக்கர்களாய் இருப்போர் பிற்காலம் பிரஜைகளாகின்றவர். அக்காலம், தத்தம் ஸமூகத்திற்கும் நாட்டின் நலத்திற்கும் பாடுபடவேண்டியவர்களாகவேண்டும். அச்சேவை புரியும்போது, நியாய புத்தியுடனும், பெருந்தன்மையோடும் தம் கடமைகளை நிறைவேற்றுதல் வேண்டுமே என்ற நோக்கத்தை மனதிற்கொண்டு மாணுக்கர்களைப் பயிற்றவேண்டிய ஆசிரியர், அவர்களை மனம்போன போக்குக்கு அவர்களது சுயேச்சைக்கே அவர்களை விட்டுவிடுதல் எங்ஙனம்?"

"தன்னடக்கம், சுயநலங்கருதாமை, பிறர் நன்மையின் பொருட்டுச் சொற்ப அளவிலாகிலும் பரித்தியாகம் செய்யத் துணிபு முதலிய உத்தம குணங்களை இளைஞரிடத்தில் வளர்க்கக் கண்ணுங்கருத்துமாயுள்ள ஆசிரியர், பிள்ளைகளுக்குத் துவக்கத்தில் துன்பம்போல் காணப்படினும் இறுதியில், இன்பம் பயக்க வல்லதான ஒரு காரியத்தை, சுயேச்சைக் கொள்கைக்கு பங்கம் வருமே என்று அதனைக் கைசோரவிடுதல் தகுமா?"

பிள்ளைகளின் சுயமதிப்புக்கும் சுவாதீன சுதந்திரங்களுக்கும் கெடுதல் நிகழாவண்ணம் அவர்களையடக்கி யாளும்போது, அவர்களுடைய சுபாவ நாட்டங்களில் ஆசிரியர் தலையிடுகிறார் எனக் குற்றஞ்சாட்டுங் கூற்றை என்னவென்போம்.

"கிண்டர் கார்ட்டன், மாண்டி ஸோரி, முதலிய பால போதனுமுறைகளை அதிக்கிரமித்து அப்பியாசம் செய்ததின் பயனுக மேல்வகுப்பில் — உயர்தரக் கல்வி கற்கவரும் தருவாயிலுள்ள — அநேக மாணுக்கர்களது நிலைமை கெட்டுப்போய், அவர்களுடைய ஜீவியமே பாழாகிவிட்டது எனப் பரிதபிக்கும் பெற்றோர்கள் பலர் உளர் என எளிதில் எண்பிக்கமுடியும்."

"பரித்தியாகம் செய்யத் துணிபே வீரத்தன்மை; சுயநலங் கருதாமையே அதன் அடிப்படை; பொது சேவைபுரிய எண்ணங்கொள்ளுதலே அதன் அரண்; தாராள சிந்தனையும், பெருந்தன்மையும் அதன் சிறப்பு; இவற்றை ஈடேற்றுவதில் உண்டாகும் மனத்திருப்தியே அதற்குத் தகுந்த சம்பாவனை. எனவே, இளைஞர் இவ்வழியிற் பயிலவேண்டியதும், ஆசிரியர் அவர்களை அவ்வாறு பயிற்றவேண்டியதும் பெருங்கடனுயிருக்க, மட்டில்லாச் சுயேச்சையின்படி மாணவர்களை விட்டுவிடவேண்டுமென்ற போதகத்தின் பாதகத்தை எவ்வாறு கூறுவது?"

மைசூரில் சுற்றுப்பிரயாணம்

(25-ம் பக்கத் தொடர்ச்சி)

II. கோலார் தங்கச் சுரங்கம்

(1) சுரங்கத்துக்குள் நடக்கும் வேலை

கோலார் மைசூரிலுள்ள ஜில்லாக்களில் ஒன்று. இது இந் நாட்டின் கீழ்பாகத்திலுள்ளது. சென்னையிலிருந்து பெங்களூர் போகும் பாதையிலிருக்கும் பௌரிங்பேட்டையிலிருந்து கோலாருக்கு ஒரு இருப்புப்பாதை போடப்பட்டிருக்கிறது. பௌரிங் பேட்டை சென்னையிலிருந்து 178 மைல். அது சென்னை-பெங்களூர் பாதையில் ஜோலார்பேட்டைக்கு மேற்கிலுள்ள ஜங்ஷன். ஜோலார்பேட்டையிலிருந்து 45 மைல் தூரத்திலுள்ளது. மிகவும் வேகமாய்ப் போகிற ரயில் 6 மணி நேரத்தில் சென்னையிலிருந்து இவ்விடம் வந்து சேரலாம். இப்பௌரிங்பேட்டையிலிருந்து பிரியும் பாதைக்கு கோலார் தங்கச்சுரங்க இருப்புப்பாதை என்று பெயர். இதன் மொத்த நீளம் 10 மைல்தான். இப்பாதையின் முதல் ஸ்டேஷனான நைன் ரீவ்ஸ் (Nine Reefs) பௌரிங்பேட்டையிலிருந்து 5 மைல் தூரத்திலுள்ளது. தங்கச் சுரங்க சம்பந்தமான வேலை இதற்கு அருகிலேயே ஆரம்பிக்கிறதென்று சொல்லலாம். அடுத்த ஒரு மைலில் கோரமாண்டலும் அதற்கடுத்த ஒரு மைலில் அதாவது பௌரிங்பேட்டையிலிருந்து 7-வது மைலில் கோலாரிலேயே முக்கியமானதும் பெரியதுமாகிய ஊர்ஹாம் பட்டணமும் உள்ளது. நாங்கள் காலை 6 மணிக்கு ஊர்ஹாமில் வந்து இறங்கினோம். நாங்கள் அதற்குமுன்பே தகவல் கொடுத்து வைத்திருந்தபடியால் சுரங்க சம்பந்தமான உத்தியோகஸ்தர் ஒருவர் எங்களை வரவேற்று சுரங்கத்திற்கு அழைத்துச் சென்றார். எங்குபார்த்தாலும் கருமையான கல்லும், சல்லியும், பாறையும் தவிர வேறு புல் மண் முதலியவை தென்படவில்லை. கண்ணுக்கு எட்டியவரையில் தொழிற்சாலைகளும் அவைகளிலிருந்து தலைதூக்கிநிற்கும் புகைபோக்கிகளுமே தென்பட்டன. இடையிடையே சிறிய வீடுகளும் காணப்பட்டன. எங்களை அழைத்துப்போன உத்தியோகஸ்தர் ஏதேதோ பேசிக்கொண்டு வந்தார். கீழே 40 ஸ்டேஷன்வரையில் அதாவது 4000 அடி இறங்கவேண்டும் என்றும் அங்கு நடக்கும் வேலையைப் பார்க்க வேண்டும் என்றும் சொன்னார். ஆனால் அவையெல்லாம் எங்களுக்குக் கனவோ நனவோவென இருந்தது. சுமார் 15 நிமிஷங்களில் நாங்கள் ஓர் பெரிய காம்பவுண்டுக்குள் நுழைந்தோம்.

அதில், முதலில் பாறைகளில் துவாரம் செய்வதற்கு உதவும் பல முகங்களையுடைய இருப்புக் கோடாரிகளும் தமர்களும் தயார் செய்யும் உலையைப் பார்த்தோம். அவ்வுலை சாதாரணமாய் நிலக்கரி போட்டெரிக்கும் உலை அல்ல, மின்சார சக்தியால் உண்டான 2000 டிக்ரீ, 3000 டிக்ரீ வரையில் உஷ்ணத்தைக் கொடுக்கும் பெரிய உலை. அதன்பிறகு கூலி ஆட்களைக் கொண்டுசெல்லும் கூடுகள், மேலும் கீழும் போவதைக் கவனித்துவரும் உத்தியோகஸ்தர் இருக்கும் அறையை அடைந்தோம். அவருக்கு எதிரில் ஓர் பலகை இருந்தது. அப்பலகையில் 1 முதல் 100, 200, 4000 முதலிய எண்கள் குறிப்பிடப்பட்டிருந்தன. அப்பலகையின் மேலும் கீழும் ஓர் முள் நகர்ந்துகொண்டிருந்தது. ஜனங்களைக் கொண்டுசெல்லும் கூடு இறங்கும் தூரத்தை பலகையில் நகரும் முள் காட்டிவிடுகிறது.

பின்பு கீழே இறங்கவேண்டிய சுரங்கத்துக்கு அருகில் சென்றோம். அங்கு பூமியில் சுமார் 18 அடி சதுரமுள்ள மேடை காணப்பட்டது. அம்மேடையின் ஓரம் மரத்தினால் பலமாய்க் கட்டப்பட்டு 4 சமபிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அவ்விதம் பிரிக்கப்பட்ட ஒவ்வொரு பாகமும் சுமார் 5 அடி சதுரமிருக்கலாம். ஒவ்வொரு சதுரத்துக்கும் நேராக 4 துவாரங்கள் நேர் செங்குத்தாக சுமார் 7000 அடி வரையில் கீழே போகின்றன. இவைகளுக்கு (Vertical Shafts) என்று பெயர். இவைகளின் பக்கங்கள் பலமான மரத்தினால் கட்டப்பட்டு இரும்பு ஆணிகளால் அடிக்கப்பட்டிருந்தன. இந்த நான்கு துவாரங்களிலும் ஒவ்வொரு இராட்டினத்தின்மேலும் பலத்த உலோகத்தினாலான கயிறு மாட்டப்பட்டிருக்கிறது. அக்கயிற்றின் ஒவ்வொரு நுனியிலும் ஒவ்வொரு கூடு கட்டப்பட்டிருக்கிறது. அதன் வழியாகவே ஜனங்கள் இறங்கவேண்டும். இவைகள்மேல் இரண்டு இராட்டினங்கள் சுற்றுகின்றன. இவ்விதம் கேணிகள் போலுள்ள சுரங்க வாய்களின் வழியாய் இரும்புத் தகட்டினாலான கூடுகள் மேலும் கீழும் அதிவேகமாய் போய்க்கொண்டிருக்கின்றன. உலோகத்தினாலான கயிற்றின் மொத்த நீளம் 6000 அடி இருக்கும். ஆகவே இராட்டினத்தின் ஒருபுறமிருக்கும் கூடு தரை மட்டத்திலிருக்கும்போது மறுபுறமிருக்கும் கூடு தரை மட்டத்திற்கு 6000 அடி கீழே அதாவது $1\frac{1}{8}$ மைல் நேர் கீழே இருக்கும். மூன்று தட்டுகளாகப் பிரிக்கப்பட்ட இக்கூட்டின் முழு உயரம் 21 அடி, அகலம் $3\frac{1}{2}$ அடி. ஆகவே ஒரு தட்டின் உயரம் 7 அடி. இக்கூட்டின் பக்கங்கள் பலத்த இரும்புத்

தகடுகளாலானவை. காற்ரோட்டத்திற்காக பக்கத் தகடுகளில் பல துவாரங்கள் ஏற்பட்டுள்ளன. ஒவ்வோர் தட்டு அல்லது அறைக்கும் ஒவ்வோர் கதவு உண்டு. சாதாரணமாக $3\frac{1}{2}$ அடி நீளம், $3\frac{1}{2}$ அடி அகலமுள்ள அறையில் 12 கூலிகள் ஏறிக்கொண்டு போவது வழக்கமாம். ஆனால் நாங்கள் 11 பேர் அதில் புலிகளைப்போல் அடைக்கப்பட்டோம். அவ்வறைக்குள் நாங்கள் சுமார் 4 அல்லது 5 நிமிஷங்களே தங்கவேண்டியிருந்தது. அதற்குள் நாங்கள் பட்ட கஷ்டம் கடவுளுக்குத்தான் தெரியும். மிகவும் பெரிய கூட்டத்தில்கூட அவ்வளவு நெருக்கப்பட்டிருக்க மாட்டோம். நாங்கள் கூட்டிற்குள் போவதற்கு முன்பே அங்கு எங்களுடன் வந்த உத்தியோகஸ்தர் 4000 அடி இறங்கவேண்டும் என்று சொல்லிவிட்டார். நாங்கள் கூட்டிற்குள் நுழைந்து தாளிட்டுக்கொண்டதுதான் தெரியும்; டெலிபோன் மூலமாய் Right சொன்னதும் கூடு இறங்க ஆரம்பித்தது. நிமிஷத்திற்கு 2000 அடி வீதம் அக்கூடு கீழே இறங்கி 2 நிமிஷத்தில் 40-வது ஸ்டேஷன் அதாவது 4000 அடிக்கு வந்து திடீரென நின்றுவிட்டது. அந்த இரண்டு நிமிஷ நேரத்தில் எங்கள் மனம் எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணிவிட்டது. எங்கு பார்த்தாலும் ஒரே இருள். கூடோ வெகு வேகமாக கீழே கிர் என்று இறங்குகிறது. நடுவில் சிற்சில சமயங்களில் பக்கத்தில் ஏதாவது கட்டை புறளுவதால் ஏற்படும் சத்தம் எங்களுக்கு கூடு அறுந்துவிட்டதுபோல் தோன்றும். ஒவ்வொரு க்ஷணமும் பாதாளலோகத்துக்குப் போவதாகவே எண்ணிக்கொண்டோம். நான் மேலே விஸ்தரித்த விஷயமெல்லாம் இரண்டு நிமிஷத்தில் நடந்தது. 40-வது ஸ்டேஷனில் வந்து கூடு தங்கியது. கதவைத் திறந்து வெளியில் பார்க்க அங்கு அநேக மனிதர்கள் வேலை செய்துகொண்டிருக்கக் கண்டோம். அவ்விடம் ஓர் சிறிய தொழிற்சாலைபோலவே காணப்பட்டது. தங்கம் நிறைந்த கற்களை அங்கு வெட்டுகிறார்களாவென்று கேட்டதற்கு 42-வது ஸ்டேஷனுக்கு அருகில் சிலர் வேலை செய்வதாகவும், ஆனால் 6000 அடியில்தான் தீவிரமான வேலை நடப்பதாகவும் தெரிந்துகொண்டோம். உடனே மறுபடியும் 42-வது ஸ்டேஷனுக்குப் போவதாக டெலிபோனில் சொல்லிவிட்டு கூட்டிற்குள் நுழைந்து தாளிட்டுக்கொண்டோம். ஒரு நொடிப்பொழுதில் 200 அடியும் இறங்கி 42-வது ஸ்டேஷனில் நின்றுவிட்டது. உடனே அங்கு கீழே இறங்கினோம். வெளி வந்து பார்க்க அது பெரிய தொழிற்சாலைபோல் காணப்பட்டது. சுமார் 100 பேர் வரையில் அங்கு பற்பல வேலை செய்துகொண்டிருந்தனர்.

TL
ഞ211,N11P0
N31.223

அங்கு பூமி பாறையானது. தங்கம் அப்பாறைகளின் நடுவில் அகப்படுகிறது. மேலேயிருந்து வெட்டிப் பார்த்துக்கொண்டேபோகின்றனர். அப்படிப் போகும்போது சௌகரியமான இடங்களில் ரயில் பாதையில் ஸ்டேஷன் அமைத்திருப்பதுபோல் ஒவ்வொரு 100 அடிக்கும் ஒரு ஸ்டேஷன் கட்டியுள்ளனர். அதாவது சுரங்க வாயிலின் பக்கங்களில் மேலேயிருந்து ஒவ்வொரு நூறடியில் குடைந்து அந்த இடத்தில் கொஞ்சம் நடமாடுவதற்கு இடவசதி செய்துகொண்டு பக்கத்திலுள்ள தங்கம் காணப்படும் பாறையை மாத்திரம் வெட்டிக்கொள்ளுவது வழக்கம். அதற்கு அருகிலுள்ள பாறைகளையெல்லாம் வெட்டினபிறகு மறுபடியும் நூறடியில் இடவசதி செய்துகொண்டு பக்கத்தில் வேலைசெய்வது வழக்கம். இவ்விதம் நாங்கள் பார்த்த ஊர்ஹாம் சுரங்கத்தில் சுமார் 60 ஸ்டேஷன்கள் வரையில் அதாவது பூமி மட்டத்திற்குக் கீழே 6000 அடி போயிருந்தார்கள். இவ்விதம் குடைந்த இடத்தை நிரப்புவதற்கு நல்ல சவுக்கமரத் துண்டுகளையும் இடுக்குகளை நிரப்பக் கருமையான கற்களின் சல்லிகளையும் உபயோகிக்கிறார்கள்.

அங்குள்ளவர்களை தங்கம் எங்கே வெட்டுகிறார்கள் என்று விசாரித்ததில் அந்த மட்டத்திற்கு 60 அடி ஆழத்தில் வெட்டிக்கொண்டிருப்பதாய் அறிந்துகொண்டோம். அப்பொழுது காலை மணி 9 இருக்கலாம். ஆனுல் பூமிதேவியின் அடிவயிற்றில் தங்கியிருக்கும் எங்களுக்கு அது பகல் இரவென்ற வித்தியாசம் தெரியவில்லை. எங்கு பார்த்தாலும் மின்சார விளக்கும் ஆட்கள் செய்யும் வேலையுந்தான் கண்ணில் பட்டன. பூமி மட்டத்துக்கு 4200 அடி கீழேயுள்ள அந்த இடத்தில் மிகவும் பெரிய யந்திரங்களைப் பார்த்தோம். அவ்வியந்திரங்களின் சக்கரங்கள் சுமார் 15 அல்லது 20 அடி சுற்றளவுள்ளன. அவை பல பாகங்களாக பிரித்துக் கொண்டுவரப்பட்டு ஒன்றாய்க் கோர்க்கப்பட்டனவென்று அறிந்துகொண்டோம். அப்பாதைகளின் வழியாய் (நேர் வடக்கென்று இப்போது எனக்கு ஞாபகம்) சுமார் 100 கெஜம் சென்றோம். அங்கு இப்பாதைக்குக் குறுக்காக ஓர் பெரும்பாதை போவதைக் கண்டு அதன் வழியாய் வலது பக்கம் திரும்பினோம். அங்குள்ள காற்று மிகவும் உஷ்ணமாயும் புழுக்கமுள்ளதாயுமிருந்தது. நல்ல காற்றோட்டம் ஏற்படுவதற்காக ஆங்காங்கு காற்றுடிகள் அமைக்கப்பட்டிருந்தன. மேலும் கெட்ட காற்றினுல் அபாயம் அதிகம் ஏற்படாவண்ணம் சில இடங்களில் ஆதாரக் கதவுகள் ஏற்பட்டுள்ளன. இவ்விதம் நாங்கள் போன பாதை சுரங்கமென்றே சொல்லவேண்டும். பாதை மிகவும் குறுகலானது. 5 அடி

182285

அகலமும், 6 அல்லது 7 அடி உயரமும் உள்ளது. பாழான குறுகிய மண்டபத்தில் போகும்போது எவ்விதம் பயந்து போவோமோ அவ்விதம் பயந்து சென்றோம். பக்கச் சுவரெல்லாம் கறடுமுறடான பாறையாலானது. தலைக்குமேலும் கறடுமுறடான பாறைகள் காணப்பட்டன. சில இடங்களில் சில பாறைகள் தொங்கிக்கொண்டும், இன்னும் சில இடங்களில் நீண்டுகொண்டுமிருந்தன. அநேக இடங்களில் தலைக்குமேல் பாறைகளில்லை. அதற்குப்பதிலாக சவுக்கினாலான உத்திரங்களும், அதற்குமேல் முன்சொன்னபடி இடைவெளிகள் சவுக்கங்கட்டைகளாலும் கருமையான சல்லிக் கற்களாலும் நிரப்பப்பட்டிருந்தன. அதன்கீழ்ச் செல்லும்போது தலையில் விழுந்துவிடுமோ என்னும் பயம் எங்களுக்கு அதிகமிருந்தது. தலைக்குமேல் இவ்விதமிருக்க கீழே எவ்விதமிருந்ததென்பதை கவனிப்போம். ஐந்தடி அகலமுள்ள அச்சுரங்க பாதைகளில் வெளிச்சம் கிடையாது. நாங்கள் கையிற்கொண்டு சென்ற லாந்தர் வெளிச்சந்தான். நடுவில் கற்களைக்கொண்டு செல்லும் டிராலிகள் செல்லுவதற்காக சுமார் $1\frac{1}{2}$ அடி அகலமுள்ள தண்டவாளம் போடப்பட்டிருந்தது. ஆதலின் நல்ல பாதை இந்த தண்டவாளங்களுக்கு இடையிலுள்ள $1\frac{1}{2}$ அடி அகலமே. அதற்கு வெளியில் பல இடங்களில் குழிப் பள்ளங்கள் ஏற்பட்டிருந்ததால் நாங்கள் தண்டவாளங்களுக்கு இடையே போகவேண்டியிருந்தது.

இவ்விதம் போகும்போதுதான் பக்கத்திலுள்ள பாதைகளில் வெண்மையான நிலபாகத்தைக் கவனித்தோம். சாதாரண பழுப்பு (grey) வர்ணமுள்ள பாறையில் சுண்ணாம்பு அடித்தது போல் சில நரம்புகள் ஓடுவதைக் கண்டோம். இது சாதாரணமாய் சநதனக் கல்லில் ஓடும் வெண்மை நரம்புகளை ஒத்திருந்தது. பக்கத்திலுள்ள பழுப்பு வர்ணத்திலிருந்து இது நல்ல வெண்மையாகத் தெரிகிறது. இவ்விதமான நரம்பு ஓடும் பாகத்தில்தான் தங்கத்தூள்கள் தென்படுகின்றன. சற்றுத்தூரத்தில் பக்கத்தில் ஓர் துவாரமிருப்பதையும் அந்த துவாரத்தின்கீழ் வழி ஒன்று செல்வதையும் அங்கு இறங்குவதற்கு ஏணி வைத்திருப்பதையும் கண்டோம். ஏணி சுமார் 30 அடி நீளமிருக்கும். மெதுவாகக் கீழே இறங்கினோம். அதற்குக்கீழ் மற்றொரு ஏணி தென்பட்டது. அதுவும் சுமார் 30 அடி நீளமிருக்கும். அதில் பாதி தூரம் இறங்கிக் கீழே நோக்கினோம். அவ்விடத்தில் குடகுபோல் பாறை குடையப்பட்டிருந்தது. மூன்று கூலியாட்கள் கௌபீனதாரிகளாய் கைகளில் கல்லுளிகொண்டு பாறைகளில் துவாரம் செய்துகொண்டி

ருந்தனர். அவர்கள் சிறிய மெழுகுவர்த்தியின் வெளிச்சத்தைக் கொண்டு வேலை செய்துகொண்டிருந்தனர். பூமியின் அடியில் 4620 அடி ஆழத்தில் இம்மனிதர் தரைமட்டத்தில் என்ன நடக்கிறதென்பதைக் கவனியாமல் தங்கள் வேலையை உண்மையுடனும் பொறுப்புடனும் பார்த்துவருவது வியப்பை உண்டாக்கியது. அவர்கள் தங்கம் கலந்த பாறையை உடைக்கும் முறை பின் வருமாறு: முன் சொல்லியபடி தங்கம் கலந்த பாறை போகும் இடத்தை அறிந்துகொண்டு அந்த இடத்தில் சிறிது சிறிது இடம் விட்டு உளியைக்கொண்டு சிறு சிறு துவாரம் போடுவார்கள். பின்பு அத்துவாரங்களில் வெடிமருந்து வைத்துவிட்டு தூரத்திலிருந்துகொண்டு மருந்தைப் பற்றவைப்பார்கள். அவ்விதம் மருந்து பற்றிக்கொண்டு வெடிக்கும்போது பாறைகளில் அவ்வவ்விடங்களில் பிளவுகள் ஏற்படும். அப்பிளவுகளுக்கு இரு பக்கத்திலுள்ள பாறைகளையும் உளியால் தட்டிவிட்டு கூடைகளில் சேர்ப்பார்கள். தங்கம் இல்லாத சல்லிகளை எறிந்துவிடுவார்கள். தங்கம் உள்ள கருங்கல் சல்லிகள் நமது ரஸ்தாக்களுக்குப் போடும் கருங்கல் சல்லிகள்போலவே உடைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் அச்சல்லிகள் சிலது வெண்மையாக இருக்கின்றன. அச்சல்லிகளில் காக்காப்பொன் மின்னுவதுபோல் சிற்சிலவிடத்தில் ஒன்றிரண்டு பொன்தூள் தென்படுகிறது. மேலும் 1 டன் சல்லிகளை உடைத்தால் ஒரு அவுன்ஸ் (அதாவது 4 பவுனிடையுள்ள 60 ரூபாய் பெறுமானமுள்ள) தங்கம் கிடைக்கிறது. இந்த விஷயம் கவனிக்கத்தக்கது. இவ்வளவு அபூர்வமாய்க் கிடைப்பதால்தான் தங்கம் மிகவும் விலையுள்ள நாணயமாக விற்கிறது. கூடையில் சேகரித்த தங்கமுள்ள சல்லிகளை டிராலிகளில் போட்டு சாய்ந்த பாதை வழியாய் (Slanting Shaft) பூமியின் மேல் மட்டத்துக்கு கொண்டுவந்து சேர்க்கிறார்கள். ஆகவே பூமி மட்டத்துக்குக் கீழ் நடக்கும் வேலை தங்கமுள்ள சல்லிகளைத் தேடிச் சேகரித்து மேலே கொண்டுவருவதே. அச்சல்லிகளைத் தூள் செய்து தங்கத்தை வேறாகப் பிரிக்கும் வேலையெல்லாம் வெளியிலேயே நடக்கின்றன.

(தொடரும்)

M. Krishnamurthi Aiyar, B.A., L.T.,
R. C. B. & Trng. School, Trichinopoly.

சந்தாதார் பக்கம்

[இத்தலைப்பின்கீழ் சந்தாதார் கேட்கும் கேள்விகள், கேள்விகளுக்கு அவர்கள் சொல்லும் விடைகள், அவர்கள் எழுதும் கடிதங்கள், வியாசங்கள் முதலியவைகளைப் பிரசுரிப்போம். எழுதுபவர்கள் இதற்கென்று பிரத்தியேகமான காகிதத்தின் இடது பக்கம் கொஞ்சம் இடம்விட்டு காகிதத்தின் ஒரே பக்கத்தில் தெளிவாயும் சுருக்கமாயும் எழுதும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். சந்தாதாரின் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்திரவாதியல்லர்.]

ஓய்வுநேர வேலைகள் (Hobbies)

நாம் ஜீவனத்திற்காகச் சம்பளத்தின் பொருட்டு ஒரு தொழிலைச் செய்கிறோம். இவ்வித ஜீவனத் தொழிலே உத்தியோகம் எனப்படும். ஆனால் அத்தொழிலுக்கிடையே ஓய்வு நேரங்களில், எவ்வித ஊதியத்தையும் கருதாது மன உல்லாசத்திற்காகத் தாமாக மேற்கொண்டு செய்யும் வேலைகள் ஓய்வுநேர வேலைகள் (Hobbies) எனப்படும். சிலருக்கு இது ஒரு புதிய கருத்தாகத் தோன்றலாம். அது அவ்வாறல்ல. நாம் ஒரு தொழிலையே செய்து வந்தால் அதில் அருவருப்பு உண்டாகக்கூடும்; மனதிற்கு உற்சாகம் ஏற்படாது; மனக்களைப்பும் தேகக் களைப்பும் உண்டாகும். ஆதலால் இதர சிற்சில தொழில்களை அறிந்து அவைகளைச் செய்வது, மிக்க அவசியமாகும். இவ்வித ஓய்வுநேர வேலைகள் பலவுள :—

சங்கீதம், தோட்டவேலை, காகிதக்கவர் செய்தல், காகிதப் பூ வேலைகள், புஸ்தகம் பைண்டு செய்தல், கூடைகள் முடைதல், தச்சு முதலிய கைத்தொழில், புத்தகங்கள் பத்திரிகைகள் வாசித்தல், இராட்டினத்தால் நூல் நூற்றல், தபால் தலைகள் சேகரித்தல், புகைப்படம் எடுத்தல், சித்திரம் வரைதல், படங்கள் சேகரித்து ஒட்டிவைத்தல், பழமொழிகளை எழுதிவைத்தல், செல்வப் பிராணிகளை வளர்த்தல், காகூதிசாலைப் பொருள் சேகரித்தல், ஐக்கிய நாணயச் சங்கம், கிராமப்புனருத்தாரணம், ஸ்தல ஸ்தாபனங்கள் முதலிய துறைகளில் பிறர் நலத்திற்கு உழைத்தல், புத்தகமெழுதுதல், பத்திரிகைக்கு எழுதல், இவையும் பிறவும் ஆகும்.

உபாத்திமார்களாகிய நாம் ஒவ்வொருவரும் இரண்டொரு ஓய்வுநேர வேலைகளைக் கற்று, நமது ஜீவனத் தொழிலுடன்

அவைகளை உபத்தொழிலாகக்கொள்ளவேண்டும். அவ்வாறு செய்தல் வயிறு வளர்ப்பதற்கு அல்ல; பொருளுக்காக அல்ல. நமது ஓய்வுநேரத்தை, வீண் வம்புப் பேச்சுகளிலும், கெட்ட நடவடிக்கைகளிலும் வீணுக்காமல் அந்நேரத்தை நல்வழியில் உபயோகிக்க, மேற்கூறிய வேலைகள் உதவியாகின்றன. இவைகளால் மனஉல்லாசமும், தொழில் வன்மையும், புத்திக்கூர்மையும் ஏற்படும். நமது ஜீவனத் தொழிலை உற்சாகத்துடனும், திறமையுடனும், செய்ய இவை உதவியாகும். ஆனால் ஜீவனத் தொழிலுக்குக் குறை ஏற்படும்படி ஓய்வுநேர வேலைகளை அளவிற்குமிஞ்சிச் செய்தல் கூடாது.

R. Thomas, H. M.,
(Old Student)
Kidarakulam P.O.,
Nettur, Labour School.

மன வலிமையே உற்சாகம்

நாம் வேலை செய்வதற்காகவே பிறந்துள்ளோம். வேலை செய்துதான் ஆகவேண்டுமேயொழிய அதன் பலனை அனுபவிக்க நமக்கு சுதந்தரமுண்டெனினும் வேலைக்குக் கூலி கைமேற் கிடைக்கவில்லையே என்ற ஏக்கம் நமக்கு வேண்டியதில்லை.

சாத்தியப்படாததும் அநுஷ்டிக்கக்கூடாததுமான வேலையை (உதாரணமாக: நாம் கடவுளாகுதல் வேண்டும் என்பதுபோன்ற சிந்தனையை) நீக்கி மனோசக்திக்குப் பொருத்தமான எல்லா வேலைகளையும் செய்துமுடிக்க நமக்கு அபாரசக்தியுண்டு என்பதை நாம் நம்பவேண்டும். அந்த நம்பிக்கைக்காதாரமான கல்வியைக் கற்றுத்தேர்ந்து மனதை உழுது பண்படுத்தி, துணிவைத் தூண்டிவிடவேண்டும். பிறகு நம்மையே நாம் உறுதியாக நம்பவேண்டும். நான் என்றால் யார்? என்ற வினவிற்கு நம் மனதே விடையளிக்கவேண்டும். இவற்றிற்கெல்லாம் மன வலிமையே அபரிமிதமாய் வேண்டும்.

ஆகவே, கஞ்சத்தனமுள்ளவன் எவ்வாறு பணத்தை விரயஞ் செய்யாமல் சேமித்துவைக்கிறானோ, அவ்வண்ணமே நமது மன வலிமையை கேவலமும் ஈனமுமான செய்கைகளுக்குப் பங்கிட்டுக் கொடாமல், நாம் செய்யப்புகும் நன்மையான காரியங்களுக்காக செலவிட சேர்த்துவைப்போமாக. நாம் செய்யப்புகும் காரியத்தின் இலட்சியத்தை அடிக்கடி மாற்றிக்கொள்வது நன்றன்று. நாம் துணிந்து செய்யும் ஓர் காரியத்திற்கு பலரும் பலவிதமாக

பாட்டன், பூட்டன், முப்பாட்டன் கதைகளையும் காரணங்களையும் சொல்லி நம் மனது பேதிக்கும்படி கூறுவர். அவைகளுக்கெல்லாம் நாம் காதுகொடாமல் சரியாய்த் தீர்மானித்ததைத் துணிந்து செய்யவேண்டும். நாம் துணிந்தது சிலவேளை கைகூடாவிட்டால் முன்னமே நான் சொன்னேனே கேட்கவில்லையே என்னும் பாடலை நம்முன் பாட வருவார்கள். அவைகளையெல்லாம் தள்ளிவிட்டு மீண்டும் அதைத் தொடர்ந்து செய்யப் பிரயாசைப்படவேண்டும். சிறு குழந்தைகள் தட்டித்தள்ளாடி விழுந்து எழுந்துதான் பிறகு நிமிர்ந்து நடக்கப் பழகுகின்றனர். அவ்வாறேதான் நம்முடைய மனோசக்தியும் தட்டுத்தடுமாறி மேம்பாடடையும் குணத்தைக் காண்பிக்கும். துணிந்தவனுக்குச் சமுத்திரம் முழங்காலளவன்றோ? முடியாதென்ற சொல் சக்தியற்றவர்களாலும் சோம்பேறிகளாலும் கட்டிவிடப்பட்ட கட்டுக்கதையேயாகும்.

தீராத ரோகங்களெல்லாம் துணிந்தவனுக்குமுன் நிற்காது. மாயையின் ஜாலமெல்லாம் இவனிடம் அந்தரடித்துவிடும். ஆகவே பிரவர்த்திக்கும் எல்லாவித உற்சாகத்திற்கும் மன வலிமையே இன்றியமையாததாகும்.

மனத்துணிவென்றால் ஒன்றைக் கண்டு பயப்படாதிருத்தல் என்பதல்ல. துன்பதுரிதங்களைப் பொறுமையுடன் அனுபவித்து கடவுள்பால் ஒப்புவிப்பவனே தீரபுருஷன். இவனே சத்புருஷன், சித்தவலிமையடைந்தவன். இவனே மனோதிடன் கொண்டவன், துணிவுகொண்டவன், இத்தகையோன் எவ்விடத்தில் வழியுண்டென்பதை அறிந்து சந்தடியின்றி நுழைந்து, பின் வளையைப் பெரிதாக்கிக்கொண்டு, கோட்டைக்குள் நுழைந்து கொடியும் போட்டு, வீரப்பிரதாபம் பெற்று, கெம்பீரனாய் வெற்றி, வெற்றி என வெளிவருவான்.

விதி விதி என்று மனோதிடத்தை இழந்தவனே ஊன்றி யோசிக்குங்கால் தனக்குள் ஓர் துணிவு இருப்பதை அறிவான். அத்தகைய துணிவு தன்னிடம் இருப்பதாக அறிந்துகொண்டவனுக்கு எதுதான் ஆகாதது, எதுதான் கஷ்டம்? அவன் பட்ட மரத்தில் கை வைத்திடினும் அது சட்டெனத் துளிர்த்துவிடும். அன்னியர் முதலாய் அறிமுகமாகிவிடுவர். பகைவரும் நேசமுறுவர். மாயை மறைந்துவிடும். மாண்பு நிறைந்துவிடும்.

அப்பேர்ப்பட்டவனுக்கு எதில்தான் தோல்வி? மோரைப் பெருக்கி, நெய்யையுருக்கி உண்பார் பேரைச் சொன்னாலும் நோய் வராது என்பதுபோல், அவன் பார்வைக் கண்களைப் பிறர் உற்று நோக்கியதும், அவர்களும் வெற்றி வழியில் சுற்றிக்கொள்வார்

கள். இத்தகைய வெற்றியால் அவனே உலகம் புகழும். இம்மையிலும் மறுமையிலும் மங்காத வெற்றி. மவுனத்தில், அடக்கத்தில், மேரை மரியாதையில் வெற்றி. பக்தியில், கீர்த்தியில் வெற்றி. சினேகத்தில் வாஞ்சையில் வெற்றி. அன்பில் ஆதரவில் வெற்றி. ஒழுக்கத்தில், நடையில் வெற்றி. வாழ்வில் வெற்றி. சுக துக்கங்களில் வெற்றி. பின்னுக்கும், முன்னுக்கும் வெற்றி. அங்குமிங்கும் வெற்றி. எங்கும் வெற்றி. எடுத்த காரியம், நினைத்த சிந்தனை யாவும் வெற்றி. இருக்கும்போதும் வெற்றி. இறந்தபின்னும் வெற்றி. தோற்றுவதெல்லாம் துணிந்தவனுக்கு முற்றிலும் வெற்றி. இருண்டதெல்லாம் அருண்டவனுக்குத் தோல்வி. அருண்டவனுக்கு எங்குமே இருள். துணிந்தவனுக்கு எங்கும் திறந்தவெளி. வலிமையுள்ளவனுக்கு வாழ்நாள் சுபநாள். வலிமையற்றவனுக்கு என்நாளும் வறுமை நாள். வலிமையுள்ளவனிடத்தில் எல்லா வகைக் கீர்த்தியும் சேருகிறது. வலிமையற்றவன் வறுமையையும் சிறுமையையும் வாவென்று அழைக்கிறான்.

மன வலிமையை அபரிமிதமாய்ச் சேர்த்து வைத்திருக்கும் வாலிபர்களே, உங்களுக்கு மேற்கூறிய வெற்றிகளையடைய விருப்பமுண்டெனில், குதிரையாகிய மனவலிமையின் லகானைக் கெட்டியாய்ப்பிடித்து, மேடு பள்ளம் பார்த்து, எச்சரிக்கையாய் ஓட்டுங்கள்! இல்லையேல் கரணம் தப்பினால் மரணமேயாகும்.

M. Joseph.
Old Student,
Mount Carmel Church, Covelong.

டிரில் பாட்டு

(இங்கிலீஷ் மெட்டு)

1. கம்பும் நெல்லும் விளையும்மே
உனக்கும் எனக்கும் தெரியும்மே.
2. கதிரொரு முழந்தான் நீளும்மே
கருக் கரிவாளால் அறுப்போமே.
3. கட்டாய்க்கட்டி எடுப்போமே
களத்திற் கொண்டு சேர்ப்போமே.
4. அரியாய் எடுத்ததை அடிப்போமே
அள்ளித்தூற்றிப் பிரிப்போமே.

5. செந்நெல் வெண்ணெல் வகையாமே
சேர்த்துக்கட்டி நாம்தாமே.

6. குதிரிற்கொண்டு சேர்ப்போமே
குற்றிக்குற்றி உண்போமே.

7. கடவுளை யனுதினம் புகழ்வோமே
கருத்தாய் வீழ்ந்து தொழுவோமே.

S. கந்தசாமி பிள்ளை,
Drill-Master,
R. C. Bg. & Training School,
Trichinopoly.

போதகவிஷய பூங்கொத்து
கொத்து 22 மலர் 2 ஆகஸ்டு 1931 பக்கம் 32

யோஜனைக் கணக்குகள்

1. விடை

தகப்பனார் வயது	...	65
மூத்த மகன் வயது	...	25
2-வது மகன் வயது	...	23
3-வது மகன் வயது	...	17

65=65

JL
87241, N11PP
N31.22.3

2. விடை

அறிக்கை அனுப்பியது	...	16 பேர்
வந்தவர்கள்	...	4 ,,
முதலில் சமைத்தது	...	3 ,,

எஸ். [illegible]. வி. நாதன்
[illegible]ானந்த விலாஸ்,
[illegible] ஜெமீன் தத்தனூர்.

182285
சென்னை-600 008

PERMISSU SUPERIORUM
St. Joseph's Industrial School Press, Trichinopoly.—1931